நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிரான


# கண்டன பொதுக்கூட்டம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கியத் திட்டங்கள் புறக்கணிப்பு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும், எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து வருகிற **பிப்ரவரி 8, சனிக்கிழமை, மாலை** தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கழகம் சார்பில் "**கண்டன பொதுக்கூட்டம்**" நடைபெறும்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 03.02.2025

**தலைமைக் கழகம்**
தி.மு.க.




ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின

# மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்ட கல்விக்கடன் ரூ.48.95 கோடி தள்ளுபடி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, பிப்.4-

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு 1972-1973 முதல் 2002-2003 வரையிலான காலங்களில் மருத்துவம் / மருத்துவம் சார்ந்த படிப்புகள் உட்பட அனைத்து படிப்புகளுக்கும் மற்றும் 2003-2004 முதல் 2009-2010 வரையிலான காலங்களில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளுக்கு வழங்கப்பட்ட கல்விக் கடன்களில் ரூ.48.95 கோடி நிலுவைத் தொகையினை மாணாக்கர்களிடமிருந்து வசூலிக்க இயலாததன் காரணமாகவும், வசூலிக்க சரியான பதிவேடுகள் மற்றும் விவரங்கள் ஏதும் அலுவலக ஆவணங்களில் இல்லாததாலும் மற்றும் வசூலிக்க வேண்டிய நபர்களை அடையாளம் காண இயலாததாலும், ரூ.48,95,00,000/-ஐ (ரூபாய் நாற்பத்தெட்டு கோடியே தொண்ணூற்று ஐந்து லட்சம் மட்டும்) சிறப்பினமாக கருதி முழுவதும் தள்ளுபடி (*Write off proposal*) செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் – கழகத் தலைவர் –

# முதல்வர் பிறந்தநாளை மக்கள் விழாவாக வெகுவிமரிசையாக கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

திருவள்ளூர், பிப்.4 -

கழகத் தலைவர் - முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாளை மக்கள் விழாவாக வெகு விமர்சையாக கொண்டாடுவோம் என “சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சாதனை நாயகர், மக்கள் தலைவர், தமிழ்நாட்டின் உரிமையை மீட்டெடுத்த ஒப்பற்ற அரசியல் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாளை வெகு விமரிசையாக கொண்டாட மிகுந்த ஆர்வத்துடன் கழகத்தினர் தயாராகி வருகின்றனர். அதில், கழகத்தின் முதல் மாவட்டமாக திருவள்ளூர் மத்திய மாவட்டம் களத்தில் இறங்குகிறது என்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

கழகத் தலைவர் - தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா என்றாலே என்னைப் போன்ற நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் கொண்டாட்டம்தான். மற்ற அரசியல் கட்சியினரின் பிறந்தநாளைப் போன்று இது சம்பிரதாய கொண்டாட்டம் இல்லை. எங்களுடைய தலைவரைக் கொண்டாட ஆயிரம் காரணங்கள் உண்டு.

### வெற்றி நாயகர்!

கழகத்தின் தலைமைப் பொறுப்பிற்கு வந்த பின்னர் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் நின்று வென்று தி.மு.க.விற்கு வாகை சூடிய வெற்றி நாயகர் அவர். முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. கூட்டணி 2019, 2021, 2024 ஆகிய மூன்று பொதுத் தேர்தல்களிலும் தொடர்ந்து மகத்தான வெற்றி பெற்றது.

10 ஆண்டுகள் சோர்ந்து போயிருந்த கழகத் தொண்டர்களுக்கு தேர்தல் வெற்றியை பரிசாக அளித்திருக்கிறார் நம்முடைய தலைவர். 3 பொதுத் தேர்தல்களிலும் கூட்டணியை உடையாமல் அரவணைத்துச் சென்று மிகத் திறமையான அரசியல்வாதி என்பதை எதிர்க் கட்சியினரே ஆச்சரியப்படும் வகையில் அரசியல் செய்து வருகிறார்.

இதனால் தான், நாட்டில் பெரும்பாலான மாநிலங்களில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தாலும், தமிழ்நாட்டில் மட்டும் முதலமைச்சர் தளபதி அவர்களை எதிர்த்து பா.ஜ.க.வினால் அரசியல் செய்ய முடியவில்லை.

மாநிலங்கள் மீது அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டுப் படையெடுப்பை ஒன்றிய அரசு நடத்திக் கொண்டிருக்கும் போதெல்லாம் முதல் ஆளாய் எதிர்த்து நிற்பது தலைவர் தளபதி அவர்கள் தான். சமீபத்தில் கூட யு.ஜி.சி. வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வேண்டும் என தி.மு.க. அரசு எதிர்ப்பை பதிவு செய்த பின்னர்தான் கேரளா, கர்நாடக மாநிலங்களின் குரல்களும் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன.

இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றியிருக்கிறார் முதலமைச்சர் தளபதி அவர்கள்.

தமிழ்நாட்டின் இன்றைய வளர்ச்சியை சாதாரணமாக நாம் அடையவில்லை. சமூக நீதிக்கான 100 ஆண்டுகள் போராட்டங்கள் வழியாகத்தான் அவை சாத்தியமாகியிருக்கின்றன.

பேரறிஞர் அண்ணா ஏற்படுத்தித் தந்த அடித்தளத்தில், நவீன தமிழ்நாட்டை முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கினார். அவர்களின் வழியில் முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, அனைத்து வகையிலும் தமிழ்நாட்டை மேலும் உயர்த்தி வருகிறது.

இந்திய நாட்டின் இரண்டாவது வளர்ந்த பொருளாதார மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறார். இந்தியாவின் வலிமைமிக்க விளையாட்டு மையமாக தமிழ்நாட்டை மாற்றியிருக்கிறார். அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதில் திராவிட மாடல் ஆட்சிக்குத் தான் முதலிடம்.

### தொலைநோக்கு திட்டங்கள்!

குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம் திட்டம், புதுமைப் பெண் திட்டம், பணிபுரியும் பெண்களுக்கான தோழி விடுதி என பெண்களின் முன்னேற்றத்திற்காக தொலைநோக்கு சிந்தனையோடு திட்டங்களை செயலபடுத்துகிறார் முதலமைச்சர். பணிபுரியும் பெண்கள் அதிகமாக இருக்கும் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கி அவர்களுக்கு பாதுகாப்பு அளித்து தாயுமானவராக திகழ்கிறார்.

தமிழ் நிலப்பரப்பில் இருந்து தான் இரும்பின் காலம் தொடங்கியது என்ற மாபெரும் மானுடவியல் ஆய்வுப் பிரகடனத்தை இந்திய நாட்டுக்கு மட்டுமல்ல உலகிற்கே அறிவித்து தமிழர்களின் தொன்மையை பறைசாற்றியிருக்கிறார்.

### மக்கள் விழாவாக கொண்டாடுவோம்!

இப்படி தி.மு.க.விற்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் பெருமை சேர்க்கும் கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்த நாளை மக்களின் விழாவாக கொண்டாடுவோம். கழகத்தின் பெரு மையை பறை சாற்றும் வகையில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இருக்கும் ஆவடி மாநகரத்தின் 4 பகுதிகள், 3 நகரங்கள், 6 ஒன்றியங்கள், 1 பேரூர் உள்ளிட்ட 14 நிர்வாகங்களுக்கு உட்பட்ட 71 ஊராட்சிகள், 129 வார்டுகள், 642 கிளைகள் என ஒவ்வொரு இடத்திலும் விதிகளுக்குட்பட்டு இருவண்ண கழகக் கொடியேற்றுவோம்.

மேலும் மக்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி, தலைவரின் மகத்தான சாதனைகளை எடுத்துரைப்போம். சமுகத்தின் விளிம்புநிலை நிலையில் உள்ள ஏழை குடும்பத்தினருக்கும், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களில் உள்ளோருக்கும், மாற்றுதிறனாளிகள், நரிக்குறவர் இன மக்கள் என அனைவருக்கும் அரசி, பருப்பு, புத்தாடைகளை வழங்குவோம். படிக்கும் மாணவ கண்மணிகளுக்குத் தேவையான நோட்டு புத்தகம் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்குவோம். அறுசுவை உணவுகளையும் வழங்கி மக்கள் நாயகரின் பிறந்தநாளை வெகு விமர்சையாக கொண்டாடுவோம்.

இவ்வாறு அவர், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ்நாடு பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர் நியமனம்

# ஆளுநரின் அணுகுமுறையும் களநிலவரமும்!

தமிழ்நாட்டில் மாநில சட்டமன்றத்தால் நிறை வேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் மாநில அரசின் பொறுப்பில் 20க்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் இயங்கி வருகின்றன. இந்த பல்கலைக்கழகங்கள் அனைத்திற்கும் தமிழ்நாட்டில் ஆட்சியின் தலைவரான ஆளுநரை பல்கலைக்கழகத் வேந்தராக மாநில சட்டத்தின் அடிப்படையில் பதவியின் அடிப்படையில் நியமிக்கப் பட்டுள்ளார்.

ஆளுநர் மாநில ஆட்சியில் தலைவராக இருந்தாலும் அனைத்து முடிவுகளும் அமைச்சரவை பரிந்துரையின் பேரில் ஆளுநர் ஆணை பிறப்பிப்பார். தன்னிச்சையாக ஆளுநர் எந்த ஒரு ஆணை உத்தரவிட முடியாது. அதே போலத் தான் பல்கலைக்கழகங்களுக்கு ஆளுநர் என்கிற வகையில் வேந்தராகப் பொறுப்பேற்றுள்ள ஆளுநர் அமைச்சரவை முடிவின்படிதான் செயல்பட முடியும். பல்கலைக்கழக நிர்வாகம் கல்வி போன்றவை குறித்து பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழுவின் பரிந்துரையின்பேரில் ஆளுநர் முடிவு எடுக்க வேண்டும். அவராக எந்த முடிவும் எடுக்க முடியாது.

ஆனால் தமிழ்நாட்டின் ஆளுநர் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி நடக்காமல் அமைச்சரவையின் ஆலோசனையின்படியும் நடக்காமல் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழு பரிந்துரையின்படி நடக்காமலும் சுயமாகச் செயல்படுகிற காரணத்தால் சென்னை பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், கோவையில் பாரதியார் பல்கலைக்கழகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம். இவையனைத்து பல்கலைக்கழகங்களிலும் துணைவேந்தர் இல்லாமல் பல்கலைக்கழகம் இயங்கி வருகின்றன. மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. துணைவேந்தர் இல்லாமல் பட்டப்படிப்பு சான்றிதழ்கள் நிர்வாக குழுவின் கையொப்பமிட்டு வழங்கப்படுகிறது. அந்தந்த பல்கலைக் கழகங்களுக்கென்று பல்கலைக்கழக விதிமுறை சட்டங்கள் விதிமுறை மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு சட்டங்களாக ஆளுநரால் பிரகடனப்ப டுத்தப் பட்டுள்ளது.

ஆனால் இதையெல்லாம் கருத்தில் எடுத்துக் கொள்ளாமல் மாநில அரசின் ஆணையையும் கருத்தில் எடுத்துக் கொள்ளாமல் அமைச்சரவையின் தீர்மானங்களையும் கருத்தில் கொள்ளாமல் துணை வேந்தர் தேர்வு செய்யும் குழுவில் ஆளுநர் தலையிட்டு கூடுதலாக பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (UGC) உறுப்பினர் ஒருவரைச் சேர்க்க வேண்டும் என்கிறார். ஆனால் பல்கலைக்கழக சட்ட விதிமுறைகளில் அப்படி சேர்ப்பதற்கு விதிகள் இல்லை. இதனால் கடந்த ஒரு ஆண்டுகளுக்கு மேலாக துணைவேந்தர் நியமிக்கப்படாமல் அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (UGC) பரிந்துரை குறித்து மாநில அரசுதான் தாமாக முடிவெடுக்க வேண்டும். ஆளுநர் முடிவெடுக்க முடியாது.

**டாக்டர் வி.ஆர்.எஸ் சம்பத்**
வழக்கறிஞர்,
ஆசிரியர், சட்டக்கதிர்



பல்கலைக்கழக அன்றாட நிர்வாகத்தில் ஆளுநர் தலையிடுகிறார். துணைவேந்தர்களை ஆளுநர் மாளிகைக்கு அழைத்து பேசுகிறார். நேரடியாக நிர்வாகத்தை தன் கையில் எடுத்துக் கொண்டு இயங்குகிறார். இதனால் உயர் கல்வியினுடைய தரமும் செயல்பாடும் கேள்விக் குறியாகி உள்ளன.

துணைவேந்தருக்கும் வேந்தருக்கும் இடையில் இணை வேந்தர் உள்ளார். அவர் மாநில அரசின் உயர்கல்வி அமைச்சர், துணைவேந்தர், இணைவேந்தர் வழியாகத்தான் வேந்தரை அணுக வேண்டும். ஆளுநரும் இணைவேந்தர் வழியாகத்தான் துணைவேந்தரும் தன் கருத்துகளை தெரிவிக்கலாம். ஆளுநர் அவர்கள் நேரடியாக துணைவேந்தரை அழைத்து பேசுவதால் துணைவேந்தர்கள் ஆளுநருக்கும் அரசுக்கும் இடையே அவதிப்படுகிறார்கள்.

ஒன்றிய அரசாங்கத்தால் நடத்தப்படும் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தரை ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகமே நியமித்து வருகிறது. அங்கேயும் ஒரு குழு போடுகிறார்கள். அந்தக் குழுவின் பரிந்துரைப்படி துணை வேந்தரைத் தேர்வு செய்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பி அவர் துணைவேந்தரை நியமனம் செய்கிறார்.

ஒன்றிய பல்கலைக்கழகங்களால் அந்தந்த மாநில அரசுக்கென்று எந்த உரிமையும் அதிகாரமும் பங்கும் இல்லை.

ஒன்றிய பல்கலைக்கழகங்கள் அந்தந்த மாநில அரசின் சார்பில் ஆட்சி மன்றத்தில் உறுப்பினர்களை நியமிப்பதில்லை. அதேபோல ஒன்றிய பல்கலைக் கழக துணைவேந்தர் தேர்வு முழுவதும் அந்தந்த மாநில அரசின் உறுப்பினர்கள் யாரும் இல்லை.

ஆனால் மாநில அரசால் நடத்தப்படும் பல்கலைக்கழகங்களில் சட்டத்திற்குப் புறம்பாக ஆளுநர் பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு (UGC) உறுப்பினரை நியமிக்க வேண்டும் என கூறுவதன் நோக்கம் என்ன? எந்த அதிகாரத்தின் அடிப்படையில் ஆளுநரின் இந்த அதிகாரம் உள்ளது. எந்த அடிப்படையில் உறுப்பினரைச் சேர்க்க சொல்லுகிறார்.

பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு (UGC) இயங்குவது அனைத்து மாநிலங்களிலும் வசூலிக்கும் வரி பணத்தில் இருந்துதான் நிதி பெறப்பட்டு அந்த நிதி பல்கலைக் கழக திட்டங்களுக்கு பிரித்து கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுப்பதனாலே நிதிநல்கைக்குழு (UGC) துணைவேந்தரை நியமிக்கும் அதிகாரம் பெறுமா? அதற்கான ஏதாவது செயல்முறை சட்டம் உள்ளதா? பல்கலைக்கழக சட்டத்தில் அதற்கு இடம் உள்ளனவா? மாநில அரசு அந்த சட்ட விதிமுறைகளை ஏற்றுக் கொண்டுள்ளதா? அப்படியிருக்க கற்றறிந்த ஆளுநர் அரசியல் சட்ட நடைமுறைக்கு முரணாக நடப்பதன் நோக்கமென்ன?

பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு (UGC) சொல்லும் கருத்துகள் ஆலோசனைகளே தவிர ஆணையாகாது. மாநில பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழகங்கள் சுயமாக முடிவெடுத்து அதனை மாநில அரசின் பார்வைக்கு அனுப்பலாம். பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு (UGC) தற்போது இந்தியா முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள் துணைவேந்தர் நியமனம் குறித்து அனுப்பப்பட்ட சுற்றறிக்கை மாநில அரசுகளின் முடிவை பொறுத்ததே தமிழ்நாடு அரசு அதனை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளவில்லை. புதிய கல்வி கொள்கையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு சுயமாக இயங்க அனுமதிக்க வேண்டும். அப்போது மாநில அரசு மக்களின் தேவைக்கேற்ப உயர் கல்வி வழங்கவும் மாநில பல்கலைக்கழகங்களின் தேவைகளை நிறைவேற்றவும் மாநில நிலைமைகளை புரிந்தவரும் உயர்கல்வியை அறிந்தவரும் மாநில மொழியில் தேர்ச்சி பெற்றவருமான ஒருவர் துணைவேந்தராக நியமிக்க முடியும்.

மாநிலங்களில் மாநில கட்சிகள் ஆட்சி செய்யும் முறை பல மாநிலங்களில் உள்ளது. இதனால் ஒன்றியத்தை ஆளும் கட்சிக்கும் மாநிலத்தை ஆளும் கட்சிக்கும் பெரும் பிணக்கு ஏற்படுகிறது. இந்த சிக்கல் வராமல் தடுக்க வேண்டிய கடமை நாடாளுமன்றத்திற்கு உள்ளது. உச்ச நீதிமன்றத்திற்கு உள்ளது.

இந்திய ஜனநாயகம் இந்திய அரசியல் சட்டம், இந்திய கூட்டாட்சி, இந்திய மாநிலங்களின் தனி அதிகாரம் இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு குடியரசுத் தலைவர் அல்லது உச்சநீதி மன்றம் இதற்கான தீர்வினை காண வேண்டும்.

- ஒன்றிய அரசு பல்கலைக்கழகங்களுக்கு ஒன்றிய அரசே துணைவேந்தரை நியமிக்கும்.
- நிகர்நிலை பல்கலைக்கழகங்களுக்கு நிகர்நிலை பல்கலைக்கழக நிறுவனர்கள் துணைவேந்தர்களை நியமிப்பார்கள்.
- ஆனால் மாநில அரசு பல்கலைக்கழகங்கள் மாநில அரசு துணைவேந்தரை நியமிக்க தடை. இதுதான் ஆளுநரின் அணுகுமுறையா? ஒன்றிய அரசின் செயலா? பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் (UGC) திட்டமா?
- தமிழ்நாடு அரசும் மக்களும் ஒருபோதும் மாநில அரசின் உரிமையை விட்டு தராது.



Diamond Jubilee Jamboree –2025 விழாவின் இறுதி நிகழ்வில் அணி தலைவர்களுக்கும் மாநிலங்களுக்கும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நினைவு பரிசு வழங்கினார்.



Diamond Jubilee Jamboree–2025 விழாவின் இறுதி நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விழாவின் நினைவாக அஞ்சல் அட்டை வெளியிட்டு சிறப்பித்தார்.